## <u>கம்பம் நகராட்சி</u>

**2021–ஆம் ஆண்டு ஜனவரி மாதம் (25.02.2021) ஆம் நாள் வியாழக்கிழமை பிற்பகல் 4.00** மணிக்கு, கம்பம் நகர்மன்றக் கூட்ட அரங்கில் தனி அலுவலர் தலைமையில் நடைபெறும் சாதாரணக் கூட்டம். **<u>கூட்டப் பொருட்கள்</u>**

| | |
|---|---|
| **1.** | நகராட்சி ஆணையாளர் அவர்களின் 02/2021–ஆம் மாதத்திற்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. |
| | **அலுவலகக் குறிப்பு:–** மன்றம் பதிவு செய்யலாம். |
| **2.** | நகராட்சி பொறியாளர் அவர்களின் 02/2021–ஆம் மாதத்திற்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. |
| | **அலுவலகக் குறிப்பு:–** மன்றம் பதிவு செய்யலாம். |
| **3.** | இந்நகர்மன்றத் தீர்மானம் எண். 2183, நாள். 08.02.2021 இல் கீழ் காணும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதன் படி, கீழ் காணும் திட்டப்பணி மேற்கொள்ள 24.02.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது. |

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள். | கூடுதல் % | குறைவு % |
|---|---|---|---|---|---|
| 1 | **<u>பொதுநிதி 2019–2020</u>** நந்தகோபால் சாமி நகர் MCC வளாகத்தில் உள்ள வளமீட்பு மையத்தில் (Resource Recovery Centre) தளம் மற்றும் சுற்றுச்சுவர் அமைக்கும் பணி | 1,20,000/– | கே.சி. போஸ் | 1.04 | –– |
| | | | வி. கிருஷ்ணன் | –– | **0.25** |

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு : – | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட திரு. வி. கிருஷ்ணன் ஒப்பந்ததாரர், கம்பம் அவர்கள் 0.25 சதவிகிதம் குறைவாக வழங்கிய ஒப்பந்தப் புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.040–3/2020/இ1 |

| | |
|---|---|
| **4.** | இந்நகர்மன்றத் தீர்மானம் எண். 2184, நாள். 08.02.2021– இல் கீழ் காணும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதன் படி, கீழ் காணும் திட்டப்பணி மேற்கொள்ள 24.02.2021–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது. |

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள். | கூடுதல் % | குறைவு % |
|---|---|---|---|---|---|
| 1 | **<u>குடிநீர் நிதி 2020–2021</u>** கள்ளார் பள்ளி வடக்கு பதி மேல்நிலைத் தொட்டி வளாகத்தில் செப்டிக் டேங்க் அமைத்தல் மற்றும் கள்ளார் பள்ளி, மணிநகர்,ஏகலூத்து ரோடு ஆகிய மேல்நிலை தொட்டி வளாகத்தில் பாதுகாவலர் அறைகளில் கூடுதல் வசதிகள் மேற்கொள்ளுதல் மற்றும் வாரச்சந்தையில் உள்ள மேல்நிலை தொட்டி வளாகத்தில் சுற்றுச்சுவர் அமைக்கும் பணி | 9,80,000/– | வி. கிருஷ்ணன் | 2.95 | –– |
| | | | கே.சி.போஸ் | –– | 0.16 |

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு : – | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட திரு. கே.சி.போஸ், ஒப்பந்ததாரர், கம்பம் அவர்கள் 0.16 சதவிகிதம் குறைவாக வழங்கிய ஒப்பந்தப் புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.(ந.க.எண்.1461–5/2020/இ1 |

**5.** இந்நகர்மன்றத் தீர்மானம் எண். 2152, நாள். 31.12.2020 இல் கீழ் காணும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதன்படி கீழ் காணும் பணி மேற்கொள்ள 24.02.2021–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள். | கூடுதல் % | குறைவு % |
|---|---|---|---|---|---|
| 1 | <u>**பொதுநிதி 2020–2021**</u><br>இந்நகராட்சியில் பேட்டரி மூலம் இயங்கும் வாகனத்தில் 13 எண்ணம் வாகனங்களுக்கு தேவையான உதிரி சாமான்கள் விநியோகம் செய்யும் பணி | 7,70,000/– | Jayam Equipment and Engineering. Dharapuram | மதிப்பீட்டு தொகைக்கு சமமாக | |
| | | | Una E Rickshaw, Karaikudi | 1.46 | – |

அலுவலகக் குறிப்பு : – வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் Jayam Equipment and Engineering, Thiruppur நிறுவனம் மதிப்பீட்டு தொகைக்கு சமமாக வழங்கிய ஒப்பந்தப் புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 1972–1/2020/இ1)

**6.** கம்பம் நகராட்சியில் 15–வது மத்திய நிதிக்குழு மான்யம் **2020-2021 (15th CFC)** திட்டத்தின் கீழ் கீழ்கண்ட பணி மேற்கொள்ள 24.02.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

| வ.எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | இந்நகராட்சிக்கு ஜே.சி.பி வாகனம் (Excavator Backhoe Loader-3DX)- 1 எண்ணம் கொள்முதல் செய்தல் | 29.00 |

மேற்காணும் பணிக்கு 24.02.2021 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வலைதளம் வழியாக (Online) ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரப்பெறவில்லை. மேலும், நேரடியாக (Off line) இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளி மட்டும் (Technical Bid) திறக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளியில் நிர்ணயிக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப தகுதிகள் ஆய்வு செய்யப்பட்டதில் கீழ்குறிப்பிட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் திட்டப் பணிமேற்கொள்ள தகுதியான ஒப்பந்தப்புள்ளியாக இருந்தது.

தொழில்நுட்ப தகுதி வாய்ந்த ஒப்பந்நதாரர்களின் விலை குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி நமுனா (Price Bid) 25.02.2021 அன்று ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கோரப்பட்ட விலைவிகித விபரம் கீழ்கண்டவாறு,

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள விலை விகிதம் |
|---|---|---|
| 1 | M/s, JCB India Ltd., Chennai | மதிப்பீட்டு தொகைக்கு (+) 1.72 % அதிகம் |
| 2 | M/s, Jeyaraj Automobile, Madurai | மதிப்பீட்டு தொகைக்கு ( –) 0.17 % குறைவு |

அலுவலகக் குறிப்பு : – வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட M/s, Jeyaraj Automobile, Madurai அவர்கள் 0.17 சதவிகிதம் குறைவாக வழங்கிய ஒப்பந்தப் புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 3083–1/2021/இ1)

**7.** கம்பம் நகராட்சியில் 15–வது மத்திய நிதிக்குழு மான்யம் **2020-2021 (15th CFC)** திட்டத்தின் கீழ் கீழ்கண்ட பணி மேற்கொள்ள 24.02.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

| வ.எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | கம்பம் நகராட்சிக்குட்பட்ட நந்தகோபால்சாமி கோவில் தெருவில் புதியதாக 2.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்க தொட்டி அமைத்தல் | 40.00 |

மேற்காணும் பணிக்கு 24.02.2021 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வலைதளம் வழியாக (Online) ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரப்பெறவில்லை. மேலும், நேரடியாக (Off line) இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளி மட்டும் (Technical Bid) திறக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளியில் நிர்ணயிக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப தகுதிகள் ஆய்வு செய்யப்பட்டதில் கீழ்குறிப்பிட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் திட்டப் பணிமேற்கொள்ள தகுதியான ஒப்பந்தப்புள்ளியாக இருந்தது.

தொழில்நுட்ப தகுதி வாய்ந்த ஒப்பந்நதாரர்களின் விலை குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி நமுனா (Price Bid) 25.02.2021 அன்று ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கோரப்பட்ட விலைவிகித விபரம் கீழ்கண்டவாறு,

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள விலை விகிதம் |
|---|---|---|
| 1 | M/s, A.P.Constructions,Cumbum | மதிப்பீட்டு தொகைக்கு (+) 4.98 % அதிகம் |
| 2 | திரு ஆர்.சபீர் அலி, கம்பம் | மதிப்பீட்டு தொகைக்கு ( +) 10.05 % அதிகம் |

அலுவலகக் குறிப்பு : – வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட M/s, A.P.Constructions,Cumbum அவர்கள் 4.98 சதவிகிதம் குறைவாக வழங்கிய ஒப்பந்தப் புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 3083–2/2020/இ1)**

**8.** இந்நகராட்சிக்குச் சொந்தமான குடிநீர் விநியோகம் செய்யும் டிராக்டர் TCU 9465 மற்றும் டிரைலர் TCU 9769 வாகனத்திற்கான காப்பீட்டு காலம் **31.03.2021–**ஆம் தேதியுடன் முடிவடைந்துள்ள நிலையில் தொடர்ந்து மேலும் ஓராண்டு காலத்திற்கு வாகனத்தை காப்பீடு செய்ய அனுமதியும், அதற்கான தொகை ரூ.**20,459/–**ஐ (ரூபாய் இருபதாயிரத்து நானூற்றி ஐம்பத்தி ஒன்பது) மட்டும் யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனத்திற்கு செலுத்துவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : –
1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர்/ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கண்ட தொகையினை வழங்குவதற்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**9.** இந்நகராட்சியின் 2020–2021 ஆம் ஆண்டிற்கு எழுதுபொருட்கள் மற்றும் படிவங்கள் கொள்முதல் செய்வதற்கு குத்தேச செலவினமாக ரூ.5.00 இலட்சத்திற்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.2026 நாள்.30.04.2020–இல் அனுமதி பெறப்பட்டு திருச்சி தமிழ்நாடு மல்டிபர்பஸ் நிறுவனம் மூலம் பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டது. நகர்மன்றம் அனுமதித்த தொகையை விட கூடுதல் செலவினம் ரூ.39,020/– அதிகமாக ஏற்பட்டுள்ளதால் கூடுதல் செலவினத்திற்கும் மற்றும் இனி எதிர்வரும் காலங்களில் அலுவலகத்திற்கு தேவையான எழுதுபொருட்கள் கொள்முதல் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : –
1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனமான திருச்சி மல்டிபர்பஸ் இன்டிகோ நிறுவனத்தில் கொள்முதல் செய்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**10.** இந்நகராட்சியில் 2021–2022–ஆம் ஆண்டிற்கு பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படும் குடிநீர் தன்மையை கண்டறிய மாதந்தோறும் ஏதேனும் இரண்டு குடிநீர்தேக்க தொட்டிகளில் குடிநீர் மாதிரி எடுத்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மதுரை சென்று பரிசோதனை செய்து சான்று பெறுவதற்கான உத்தேச செலவினம் ரூபாய் 50,000/–க்கு (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : – மன்றம் அனுமதிக்கலாம்.

**11.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.**1** முதல் **33** வரை உள்ள வார்டுகளில் குடியிருப்பு மற்றும் குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு குடிநீர் குழாய் இணைப்பு வழங்க குடிநீர் துணை விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள நடைமுறை விதிகளின்படி **5** சதவீதம் உயர்வு செய்து **2021–2022**ம் ஆண்டிற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள சாலை சேதாரக் கட்டணத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | நீளம் | ஜல்லி | | தார்சாலை | | சிமெண்ட்சாலை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 2020–2021 | 2021–22 | 2020–212 | 2021–22 | 2020–212 | 2021–22 |
| 1 | 0 முதல் 30 மீ வரை | ரூ.1826/– | ரூ.1917/– | ரூ. 3875/– | ரூ. 4069/– | ரூ.4468/– | ரூ.4691/– |
| 2 | 30 முதல் 90 மீ வரை | ரூ. 2860/– | ரூ. 3003/– | ரூ. 4895/– | ரூ. 5140/– | ரூ. 5483/– | ரூ.5757/– |

அலுவலகக் குறிப்பு : – மன்றம் அனுமதிக்கலாம்

| | | |
|---|---|---|
| **12.** | கம்பம் நகராட்சி பகுதியில் டெங்கு காய்ச்சல் பரவுவதை தவிர்க்கும் பொருட்டு இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் DBC பணியாளர்கள் தற்காலிகமாக பணியமர்த்தி பணிசெய்ய சென்னை. நகராட்சி நிர்வாக ஆனையர் அவர்களின் ஒ.மு.எண் 13433/2018/ஜே1 நாள்–17.09.2018 ஆம் தேதிய கடிதத்தில் அறிவுறுத்தியுள்ள படியும் மதுரை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் ந.க.எண் 6060/2018/இ3 நாள் 28.09.2018 இல் வழங்கப்பட்டுள்ள நிர்வாக அனுமதியின் படியும், தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண் 8977/2018/இ2 நாள் 11.06.2018–இன் படியும் . குறிப்பிட்டுள்ள தினக்கூலி அடிப்படையில் இந்நகர் மன்ற தீர்மான எண் **1606** நாள் 28.09.2018 இன் படி சென்னை M/s Relyon Facility Services Pvt Ltd நிறுவனத்திற்கு உத்தரவு வழங்கப்பட்டு மேற்கண்ட நிறுவனம் **01.03.2019** முதல் **28.02.2020** வரை பணி செய்து மேற்படி பணியின் ஒப்பந்த காலம் முடிந்தவுடன் மேற்காணும் சென்னை நகராட்சி நிர்வாக ஆனையர் அவர்களின் கடிதத்தில் முன்றான்டு காலத்திற்கு ஒப்பந்த முறையில் துப்புரவு பணியாளர்களை பெற்று துப்புரவு பணிகளை மேற்கொள்ள இந்நகராட்சி தீர்மான எண் **1982** நாள்.**18.02.2020** இன் படி கால நீடிப்பு செய்யப்பட்டு வருகிறது. தற்போது பணி காலம் முடியும் தருவாயில் இருக்கின்ற காரணத்தினால் அடுத்த காலத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெற நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு இறுதி செய்வதற்கு சிறிது காலமாகுமென்பதால் துப்புரவு பணிகள் பாதிப்படையாமல் இருப்பதற்கு ஏதுவாக தற்போது M/s Relyon Facility Service Pvt.Ltd என்ற நிறுவனத்திற்கு ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் பணி உத்திரவு வழங்குவதற்கும் உத்தேச செலவினத்தொகை ரூ **13.50** இலட்சத்திற்கும் மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது. | |
| | அலுவலகக் குறிப்பு : – | நிர்வாக நலன் கருதியும் பொது சுகாதார நலன் கருதியும் டெங்கு காயச்சல் பரவுவதை தடுக்கும் பணிகள் பாதிப்படையாமல் இருப்பதற்கு ஏதுவாக தற்போது துப்புரவு பணியாளர்களை வழங்கி வரும் M/s Relyon Facility Service vt.Ltd நிறுவனத்துடன் செய்துள்ள ஒப்பந்தத்தை **01.03.2021** முதல் முன்று மாத காலத்திற்கு அல்லது புதிதாக கோரப்படும் ஒப்பந்தம் பெறப்பட்டு இறுதி செய்து பணிகள் துவக்கப்படும் வரை இவற்றில் எது முன்னதாக அமைகிறதோ அது வரையில் நீடிப்பு செய்யலாம் அதற்கான செலவினத்தினை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம். **(ந.க.எண். 3963 / 2018 / எச்1)** |
| **13.** | அரசாணை எண் 166 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் துறை நாள் 23.11.2016 –இன் படி கம்பம் நகராட்சி பகுதியில் உள்ள அரசு மற்றும் நகராட்சி பள்ளிகளில் உள்ள கழிப்பிடங்களை பராமரிக்க ஆகும் செலவினங்களை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ந.க.எண் 32050/2016/ஜே2 26.10.2017 ஆம் தேதிய செயல்முறையில் மேற்படி பணியினை வெளிக்கொணர்வு முறையில் (Out sourcing ) மாவட்ட ஆட்சித்தலைவர் நிர்ணயிக்கும் தினக்கூலி அடிப்படையில் உரிய பணியாளர்களை நியமித்தும் அப்பணியாளர்களுக்கு EPF.ESI தொகை மற்றும் இதர தொகைகளை வழங்கி பணிகள் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் படி ஏற்கனவே வழங்கிய ஒப்பந்தம் எதிர்வரும் 28.02.2021 உடன் முடிவடைகிறது. இப்பணி ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து செயல்படுத்த வேண்டிய பணியாதலால் தற்போது பணியாளர்களை வழங்கி வரும் மதுரை SUN (TAMIL NADU) SECURITY Management Services Private Ltd நிறுவனம் தன்னுடைய 18.02.2020 ஆம் தேதிய கடிதத்தில் தற்போதைய ஒப்பந்த விலை விகிதத்திலேயே பணியாளர்களை வழங்குவதற்கு சம்மதம் தெரிவித்து 29.02.2020 முதல் 28.02.2021 வரையில் ஏற்கனவே மேற்படி பணிகளை செய்து வரும் மதுரை SUN (TAMIL NADU) SECURITY Management Services Private Ltd என்ற நிறுவனத்திற்கு அனுமதிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மற்றும் விலைவிகிதத்திலேயே பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி செய்து வருகிறது இப்பணியானது 28.02.2021 உடன் ஒப்பந்தம் முடிவடைய உள்ளது. அடுத்த காலத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோருவதற்க்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெற நடவடிக்கை மேற்கொள்ள பட்டு பின்னர் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு இறுதி செய்வதற்கு சிறிது காலமாகுமென்பதால் துப்புரவு பணிகள் பாதிப்படையாமல் இருப்பதற்கு ஏதுவாக தற்போது மதுரை SUN (TAMIL NADU) SECURITY Management Services Private Ltd நிறுவனத்துடன் செய்துள்ள ஒப்பந்தத்தை மேலும் மூன்று மாத காலத்திற்கு **(31.05.2021** வரை) அல்லது புதிய ஒப்பந்தம் ஏற்படும் காலம் வரையில் இவற்றில் எது முன்னதாக அமைகிறதோ அதுவரையில் ஏற்கனவே உள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு ஒப்பந்த நீடிப்பு வழங்கலாம். ஆகையால் **01.03.2021** முதல் மூன்று மாதத்திற்கு ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மற்றும் விலை விகிதத்தில் பணி உத்தரவு வழங்குவதற்கும் உத்தேச செலவினத் தொகை ரூ.**4.00** இலட்சத்திற்கும் மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது. | |
| | அலுவலகக் குறிப்பு : – | 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2 )நிர்வாக நலன் கருதியும் பொது சுகாதார நலன் கருதியும் துப்புரவு பணிகள் பாதிப்படையாமல் இருப்பதற்கு ஏதுவாக தற்போது துப்புரவு பணியாளர்களை வழங்கி வரும் மதுரை SUN (TAMIL NADU) SECURITY Management Services Private Ltd நிறுவனத்துடன் செய்துள்ள ஒப்பந்தத்தை **01.03.2021** முதல் மூன்று மாத காலத்திற்கு அல்லது புதிதாக கோரப்படும் ஒப்பந்தம் பெறப்பட்டு இறுதி செய்து பணிகள் துவக்கப்படும் வரை இவற்றில் எது முன்னதாக அமைகிறதோ அது வரையில் நீடிப்பு செய்யலாம் அதற்கான செலவினத்தினை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம். |

| | | |
|---|---|---|
| 14. | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்கள் 2,3,5,7,9,10,11,12,15,17,19,20,21,22,25 மற்றும் 27 முதல் 33 ஆகிய 22 வார்டுகளில் துப்புரவு பணிகளை மேற்கொள்ளத் தேவையான தற்காலிக பணியாளர்களை தனியார் மூலம் பணியமர்த்தி பணி செய்ய சென்னை , நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களது செயல்முறைகள் ந.க.எண் 22932/பி2/2017 , 17.11.2017 –இல் வழங்கப்பட்டுள்ள நிர்வாக அனுமதியின் படி , தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களது செயல்முறைகள் ந.க.எண் 11793 / 2019 / இ2 , 26. 08. 2019 – ஆம் –இல் குறிப்பிடப்பட்டுள்ள தினக்கூலி அடிப்படையில் இந்நகர்மன்றத்தீர்மான எண்.2032 நாள் 29.05.2020 –இன் படி M/s UK security Service , Chennai என்ற நிறுவனத்திற்கு இவ்வலுவலக உத்தரவு ந.க.எண்.3767/2019/எச்1 நாள் 29.05.2020 –இல் உத்தரவு வழங்கப்பட்டு மேற்கண்ட நிறுவனம் 01.06.2020 முதல் பணியை துவங்கி பணி செய்து இப்பணியானது கடந்த 28.02.2021 உடன் ஒப்பந்தம் முடிவடைய உள்ளது. அடுத்த காலத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோருவதற்க்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெற நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. பின்னர் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு இறுதி செய்வதற்கு சிறிது காலமாகுமென்பதால் துப்புரவு பணிகள் பாதிப்படையாமல் இருப்பதற்கு ஏதுவாக தற்போது M/s UK security Service , Chennai நிறுவனத்துடன் செய்துள்ள ஒப்பந்தத்தை மேலும் மூன்று மாத காலத்திற்கு **(31.05.2021 வரை)** அல்லது புதிய ஒப்பந்தம் ஏற்படும் காலம் வரையில் இவற்றில் எது முன்னதாக அமைகிறதோ அதுவரையில் ஒப்பந்த நீடிப்பு வழங்கலாம். ஆகையால் **01.03.2021** முதல் மூன்று மாதத்திற்கு ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மற்றும் விலை விகிதத்தில் பணி உத்தரவு வழங்குவதற்கும் உத்தேச செலவினத் தொகை ரூ.**50.00** இலட்சத்திற்கும் மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது. | |
| | அலுவலகக் குறிப்பு : – | நிர்வாக நலன் கருதியும் பொது சுகாதார நலன் கருதியும் துப்புரவு பணிகள் பாதிப்படையாமல் இருப்பதற்கு ஏதுவாக தற்போது துப்புரவு பணியாளர்களை வழங்கி வரும் M/s UK security Service, Chennai நிறுவனத்துடன் செய்துள்ள ஒப்பந்தத்தை **01.03.2021** முதல் மூன்று மாத காலத்திற்கு அல்லது புதிதாக கோரப்படும் ஒப்பந்தம் பெறப்பட்டு இறுதி செய்து பணிகள் துவக்கப்படும் வரை இவற்றில் எது முன்னதாக அமைகிறதோ அது வரையில் நீடிப்பு செய்யலாம் அதற்கான செலவினத்திற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம் .**(ந.க.எண். 3767 / 2019 / எச்1)** |
| 15. | இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் TN 60 Z 3591 வாகனத்திற்கு **09/.03.2021** –ஆம் தேதியுடன் தகுதிச்சான்று முடிவடைவதால் மராமத்து பணிகள் செய்து புதிதாக தகுதிச்சான்று பெறுவதற்கு உத்தேச செலவினம் ரூ.**1,56,000/–**ஐ (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பத்தாராயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | |
| | அலுவலகக் குறிப்பு : – | 1) மன்றம் அனுமதிக்கலாம்<br>2) அவசர அவசியம் கருதி ஆணையாளர் மற்றும் தனி அதிகாரியின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளலாம்.**(ந.க.எண். 537 / 2021 / எச்1)** |
| 16. | இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் TATA ACE வாகன எண்கள் TN60AV 2482, TN60AV 2490, TN60AV 2496 வாகனத்திற்கு **12** எண்ணம் புதிய டயர்கள் மாற்றி உபயோகப்படுத்தவும் வீல் பெலன்ஸ், வீல் அலாய்மென்ட், வீல் பிட்டிங் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ**55000/–** (ரூபாய் ஐம்பத்தி ஐயாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | |
| | அலுவலகக் குறிப்பு : – | மன்றம் அனுமதிக்கலாம் **(ந.க.எண். 537–1 / 2021 / எச்1)** |
| 17. | இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் நடைமுறையில் உள்ள அச்சம் மற்றும் அருவருக்கத்தக்க இனங்களுக்கான உரிமம் வழங்கும் முறையில் முடித்திருத்தவோர், அழகு நிலையம் , மசாஜ் நிலையம் போன்ற நிறுவனங்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டு வந்த நிலையில் தற்போது நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் Roc No **19775/J2/2019–3** நாள் **15/12/2020** கடிதப்படி மேற்கண்ட நிறுவனங்களை அரசின் கட்டுபாட்டின் கீழ் கொண்டு வர வேண்டி மேற்கண்ட நிறுவனங்களுக்கு அச்சம் மற்றும் அருவருக்கத்தக்க இனங்களுக்கான தொழில் உரிமம் பெற்றுக்கொள்ள அறிவுறித்தி அறிவிப்பு இவ்வலுவலக வாயிலாக தினசரி நாளிதழ் TRICITY MIRROR –இல் 29.12.2020 அன்று விளம்பரம் செய்யப்பட்டது. விளம்பரத்திற்கான பில் படி ரூ23436/– (இருபத்தி முன்றாயிரத்து நானுற்றி முப்பத்தி ஆறு மட்டும்) ஐ மட்டும் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | |
| | அலுவலகக் குறிப்பு : – | மன்றம் அனுமதிக்கலாம்<br>**(ந.க.எண். 3276 / 2020 / எச்1)** |

**18.** கம்பம் நகராட்சி பகுதியில் பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் வீடு வீடாக குப்பைகளை பிரித்தெடுத்து சேகரித்தல், சேகரிக்கப்பட்ட குப்பைகளை உரக்கிடங்கில் கொண்டு சென்று சேகரித்தல், மக்கும் குப்பைகளிலிருந்து உரம் தயாரித்தல் , சாக்கடை சுத்தம் செய்யும் பணி , கொசு ஒழிப்பு பணி ஆகியவற்றிற்கு அரசால் அனுமதிக்கப்பட்ட பணியாளர்கள் பற்றாக்குறையாக இருப்பதால் அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் காலியாக உள்ள பணியிடத்துக்கு தனியார் மூலம் பணியமர்த்தி பணி செய்ய சென்னை நகராட்சி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களது செயல்முறைகள் மூ.மூ.எண் 28369/J3/2018, நாள் 22.11.2018–இல் வழங்கப்பட்டுள்ள நிர்வாக அனுமதியின் படி, தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந..க.எண் 8977/2016/இ2 நாள் 11.06.2018 –இல் குறிப்பிட்டுள்ள தினக்கூலி அடிப்படையில் இந்நகர்மன்றத் தீர்மான எண் 1691, நாள் 21.02.2019–இன் படி சென்னை M/s Relyon Facility Services Pvt Ltd , என்ற நிறுவனத்திற்கு இவ்வலுவலக உத்தரவு ந.க.எண்.4468/2018/எச்1 நாள் 25.02.2019 –இல் உத்தரவு வழங்கப்பட்டு மேற்கண்ட நிறுவனம் 01.03.2019 முதல் 67 பணியாளர்களை வழங்கி பணியை துவக்கியும் இவ்வலுவலக உத்தரவு ந.க.எண்.1308/2017/எச்1 நாள் 05.02.2020 –இன் படி மேலும் 9 பணியாளர்களை வழங்கியும் பணி செய்து கொண்டு வருகிறது.

இப்பணியானது 28.02.2020 தேதியுடன் முடிவடைந்து மேற்காணும் நகராட்சி நிர்வாக ஆணையரின் கடிதத்தில் மூன்றாண்டு காலத்திற்கு ஒப்பந்த முறையில் துப்புரவு பணியாளர்களை பெற்று துப்புரவு பணிகளை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளதன் படி 01.03.2019 முதல் 28.02.2020 வரை சென்னை M/s Relyon Facility Services Pvt Ltd ,நிறுவனத்திற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டு தற்போது பணியாளர்களை வழங்கி வரும் சென்னை M/s Relyon Facility Services Pvt Ltd நிறுவனம் தன்னுடைய 31.01.2020 ஆம் தேதிய கடிதத்தில் தற்போதைய ஒப்பந்த நிலை விகிதத்திலேயே பணியாளர்களை வழங்குவதற்கு சம்மதம் தெரிவித்ததன் அடிப்படையில் சென்னை M/s Relyon Facility Services Pvt Ltd நிறுவனத்திற்கு கோரிக்கை ஏற்று ஒப்பந்த நீடிப்பு செய்து இந்நிறுவனம் தற்போதைய ஒப்பந்த காலத்தில் தேவைப்படும் பணியாளர்களை சரியான முறையில் 01.03.2020 முதல் 28.02.2021 வரையில் வழங்கி ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மற்றும் விலை விகிதத்தில் பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி செய்து வருகிறது.

இப்பணியானது 28.02.2021 உடன் ஒப்பந்தம் முடிவடைய உள்ளது. அடுத்த காலத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோருவதற்க்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெற நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. பின்னர் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு இறுதி செய்வதற்கு சிறிது காலமாகுமென்பதால் துப்புரவு பணிகள் பாதிப்படையாமல் இருப்பதற்கு ஏதுவாக தற்போது M/s Relyon Facility Services Pvt Ltd நிறுவனத்துடன் செய்துள்ள ஒப்பந்தத்தை மேலும் மூன்று மாத காலத்திற்கு **(31.05.2021** வரை) அல்லது புதிய ஒப்பந்தம் ஏற்படும். காலம் வரையில் இவற்றில் எது முன்னதாக அமைகிறதோ அதுவரையில் ஏற்கனவே உள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு ஒப்பந்த நீடிப்பு வழங்கலாம். ஆகையால் **01.03.2021** முதல் மூன்று மாதத்திற்கு ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மற்றும் விலை விகிதத்தில் பணி உத்தரவு வழங்குவதற்கும் உத்தேச செலவினத் தொகை ரூ.**30.00** இலட்சத்திற்கும் மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : – நிர்வாக நலன் கருதியும் பொது சுகாதார நலன் கருதியும் துப்புரவு பணிகள் பாதிப்படையாமல் இருப்பதற்கு ஏதுவாக தற்போது துப்புரவு பணியாளர்களை வழங்கி வரும் M/s Relyon Facility Services Pvt Ltd நிறுவனத்துடன் செய்துள்ள ஒப்பந்தத்தை **01.03.2021** முதல் மூன்று மாத காலத்திற்கு அல்லது புதிதாக கோரப்படும் ஒப்பந்தம் பெறப்பட்டு இறுதி செய்து பணிகள் துவக்கப்படும் வரை இவற்றில் எது முன்னதாக அமைகிறதோ அது வரையில் நீடிப்பு செய்யலாம் அதற்கான செலவினத்தினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம்

**19.** இந்நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனம் எண். T.N.60 V **2194** வாகனத்தின் டையனமோ சரிவர செயல்படாமல் வாகனத்தினை இயக்க முடியாத நிலையில் உள்ளது. எனவே, வாட்டர் சர்வீஸ் மற்றும் அலாய்மென்ட் சர்வீஸ் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்திட உள்ளூர் விலைப்புள்ளி கோரியதில் கீழ்காணும் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் விபரம் | விலைப்புள்ளிதாரர் பெயர் | தொகை |
|---|---|---|---|
| 1 | இந்நகராட்சி ஈப்பு எண். T.N.60 V **2194**–க்கு வாட்டர் சர்வீஸ் மற்றும் அலாய்மென்ட் சர்வீஸ் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்தல் | **1)**உரிமையாளர், பரமசிவம் ஆட்டோ கேரேஜ், வ.உ.சி. திடல், கம்பம் | ரூ. **74,500/–** |
| 2 | | **3)**ஸ்ரீ சாய்ராம் ஸ்பிரே பெயிண்டிங் ஒர்க்ஸ், சிஎம்எஸ் நகர், கம்பம். | ரூ. **73,500/–** |
| 3 | | **3)**ஸ்ரீ முருகன் ஆட்டோ எலக்ட்ரிகல், நகராட்சி எதிர்புறம், கம்பம் | ரூ. **71,950/–** |

அலுவலகக் குறிப்பு : – வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள ஸ்ரீ முருகன் ஆட்டோ எலக்ட்ரிகல், கம்பம் நிறுவனத்தின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**ஒப்பம்/– திரு. மெ. சரவணகுமார்**
**ஆணையாளர்,**
**கம்பம் நகராட்சி.**

**நாள். 25.02. 2021**
**இடம். கம்பம்**